கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் ஆலோசனை

சேலம், ஜூன் 20: கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தாதேவி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:

சேலம்மாவட்டத்தில்கள்ளச்சாராயம் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து வருவாய்த் துறை, காவல் துறை, வனத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழித்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் மலைப் பகுதிகளான கல்வராயன் மலை, ஜவ்வாது மலை, பச்சமலை மற்றும் கொளத்தூர் பகுதிகளில் கள்ளச்சாராயத்துக்கு எதிரான கண்காணிப்புப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்ட மலைப் பகுதிகளிலிருந்து மற்ற மாவட்டங்களை இணைக்கும் வழித்தடங்கள் அனைத்தும் வருவாய்த் துறை, காவல் துறை, வனத்துறை மூலம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் இடங்களில் புதிதாக சோதனைச் சாவடிகள் அமைத்து கண்காணித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மலைக் கிராமங்களில் திருமணம், திருவிழாக்கள் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளை தொடர்புடைய பகுதி கிராம நிர்வாக அலுவலர்கள், காவல் துறையினர் முழுமையாக கண்காணித்திட வேண்டும். கள்ளச்சாராயம் தொடர்பான எந்தவொரு தகவல் கிடைத்தாலும் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் மற்றும் பதுக்கி வைத்தல் உள்ளிட்ட கள்ளச்சாராயம் தொடர்பான நடவடிக்கைகளில் யாரேனும் ஈடுபட்டால் உடனடியாக காவல் துறையின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கள்ளச்சாராயம் தொடர்பாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறைக்கு 0427-2452202, 0427-1077 ஆகிய தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கலாம். மேலும், 10581 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் பொதுமக்கள் தகவல் தெரிவிக்கலாம்.

மருத்துவ தேவை, ஆய்வுக் கூடங்களுக்கு மெத்தில் ஆல்கஹால் மற்றும் எத்தனால் உரிமம் வைத்துள்ளவர்கள் அனைவரும் தங்களது வரம்புக்கு உள்பட்டு மட்டுமே பயன்படுத்துவதை முழுமையாக கண்காணித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிப்பதற்கு காவல் துறை, வருவாய்த் துறை, வனத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.கே.அருண் கபிலன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, மேட்டூர் சார் ஆட்சியர் நே.பொன்மணி, மாநகர காவல் துணை ஆணையர் எஸ்.பிருந்தா உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடன் வியாழக்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசுகிறார் மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தாதேவி.

கள்ளச்சாராயம் விற்ற 4 பேர் கைது

ஆத்தூர், ஜூன் 20: தலைவாசல் வட்டத்தில் கள்ளச்சாராயம் விற்ற 4 பேரை தலைவாசல் போலீஸார் கைது செய்து வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விஷ சாராயம் குடித்தவர்களின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், சேலம் மாவட்ட எல்லைகளில் தீவிர கள்ளச்சாராய வேட்டையை நடத்த சேலம் சரக டி.ஐ.ஜி. உமா, சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண்கபிலன் ஆகியோர் உத்தரவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் அருகே உள்ள சேலம் மாவட்ட எல்லையான தலைவாசல், ஆத்தூர், மணிவிழுந்தான், கல்வராயன் மலைக் கிராமங்களில் போலீஸார் தீவிரமாக கள்ளச்சாராய சோதனை நடத்தினர்.

தலைவாசல் வட்டத்தில் ராமசேஷபுரம், சிறுவாச்சூர், மணிவிழுந்தான் ஆகிய பகுதிகளில் கள்ளச்சாராயம் விற்பனை நடைபெற்று வருவதாக தலைவாசல் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக போலீஸார் அந்த பகுதிகளுக்குச் சென்று கள்ளச்சாராயம் பதுக்கி வைத்து விற்றுக் கொண்டிருந்த சிறுவாச்சூர் பகுதியைச் சேர்ந்த பால்ராஜ் (25), ராமசாமி (58), காமக்காபாளையம் பகுதியைச் சேர்ந்த பெரியம்மாள் (60), வடகுமரை பகுதியைச் சேர்ந்த சிவகாமி (60) ஆகிய 4 பேரை கைது செய்து, அவர்களிடம் இருந்த சாராயத்தை பறிமுதல் செய்தனர்.

மேலும், அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதில், பெண்களை ஜாமீன் மூலம் விடுவித்த நீதிமன்றம், இருவரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தது. இதில் தொடர்புடைய மற்ற நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

விஷ சாராயம் குடித்ததில் இளம்பிள்ளையைச் சேர்ந்தவர் பலி

ஆட்டையாம்பட்டி, ஜூன் 20: கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்ததில் இளம்பிள்ளையைச் சேர்ந்த முதியவர் உயிரிழந்தார்.

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து பலர் இறந்துள்ளனர். மேலும், அப்பகுதியில் சாராயம் குடித்தவர்கள் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இளம்பிள்ளை அருகே பெருமாகவுண்டம்பட்டி கிராமம், ராமாபுரம், பள்ளக்காடு பகுதியைச் சேர்ந்த அய்யாவு (எ) செங்கோடன் (60), அவரது மனைவி ஆகியோர் கடந்த சில ஆண்டுகளாக கள்ளக்குறிச்சியில் பேக்கரி கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தனர். அங்கு வீடு வாடகைக்கு எடுத்து கணவனும், மனைவியும் வசித்து வந்த நிலையில், புதன்கிழமை மாலை அய்யாவு சாராயம் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். பின்னர், சிறிது நேரத்தில் அவருக்கு உடல்நிலை பாதித்தது.

உடனே கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், பலனின்றி அய்யாவு (எ) செங்கோடன் உயிரிழந்தார். அவரது சடலம் உடற்கூறாய்வுக்கு பின்னர் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது சடலத்தை சொந்த ஊரான இளம்பிள்ளை அருகே உள்ள ராமாபுரம், பள்ளக்காடு பகுதிக்கு எடுத்து வந்து உறவினர்கள் அடக்கம் செய்தனர்.

லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர்கள் இருவர் கைது

சேலம், ஜூன் 20: தலைவாசல் அருகே சாலை போடுவதற்கான ஒப்பந்தத்துக்கு பணம் ஒதுக்கீடு செய்ய லஞ்சம் வாங்கிய உதவி செயற்பொறியாளர், வரைபட அலுவலர் ஆகியோர் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

சேலம் மாவட்டம், தலைவாசல், வரகூர் பகுதியில் சாலை ஒப்பந்தப் பணிகளை செந்தில் என்பவர் மேற்கொண்டு வந்தார். தலைவாசல் அருகே தெற்கு மணி விழுந்தான் மற்றும் தலைவாசல் பகுதிகளில் ரூ. 90 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்பட்டது.

இந்த சாலை அமைக்க ஒப்பந்தத் தொகையான ரூ. 90 லட்சம் ஒதுக்கீடு செய்வதற்காக உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், இளநிலை வரைபட அலுவலர் சாகுல் ஹமீது ஆகியோர் ஒரு சதவீதம் லஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு ஒப்பந்ததாரர் செந்தில் ரூ. 50,000 தருவதாக ஒப்புக் கொண்ட நிலையில், மேலும் ரூ. 61,000 தர வேண்டும் என வற்புறுத்தி உள்ளனர்.

இதற்கு சம்மதிக்காத செந்தில், இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு காவல் துறையிடம் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி கிருஷ்ணராஜா, காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்துக்கு வந்தனர். அப்போது ஒப்பந்ததாரர் செந்தில்குமார் ரசாயனம் தடவிய ரூ. 61 ஆயிரத்தை ரவிச்சந்திரன், சாகுல் ஹமீதிடம் வழங்கும் போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு துறையினர் அவர்களை கையும் களவுமாக பிடித்தனர்.

மேலும், அலுவலகத்தில் கணக்கில் வராமல் இருந்த ரூ. ஒரு லட்சத்து 21 ஆயிரத்தையும் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் இளநிலை வரைபட அலுவலர் சாகுல் அமீது ஆகியோரை லஞ்ச ஒழிப்புப் போலீஸார் கைது செய்தனர்.

பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI

கடன் வசூல் கிளை : நரைத் தளம், 'ஸ்டார் ஹவுஸ்' எண்.324, பேங்க் ஆப் இந்தியா பில்டிங், ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் – 641 001.

சுவாதீன அறிவிப்பு

(பாதுகாக்கப்பட்ட சொத்திற்காக) 2002, சர்பேசி சட்டம் விதி 8(1) ன் கீழ்

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி பிரிவு 13(2)–ன் கீழ் விதி 3–ன் படி **பாங்க் ஆப் இந்தியா, கடன் வசூல் கோயமுத்தூர் கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் இவ்வங்கியிலிருந்து கடன்பெற்ற **கடன்தாரர் : M/s. கோல் குளோசர்ஸ்,** எண்.190, பேரூர் ரோடு, குமாரபாளையம் அஞ்சல், கோயமுத்தூர்–641026, **பங்குதாரர்கள் : R.விசித்ரா,** க/பெ.திரு.ராமச்சந்திரன், கதவு எண்.241, குபேர் கார்டன், அண்ணா பாதை, செல்வபுரம், கோயமுத்தூர்–641 026 மற்றும் **திரு.பொன்னுசாமி.V,** த/பெ.வாங்கிலி கவுண்டர், கதவு எண்.47/1, காந்தி நகர், கூட்டுறவு காலனி, மோகனூர் ரோடு, நாமக்கல்–637001 என்பவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய கேட்பு ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **05.04.2023 தேதி வரையான நிலுவை ரூ.26,40,35,368.54 (ரூபாய் இருபத்து ஆறு கோடியே நாற்பது லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து முன்னூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா ஐம்பத்து நான்கு) மற்றும் 05.04.2023 தேதியிலிருந்தான பொருந்தும் பின்வட்டியுடன் 05.04.2023** நாளிட்ட கேட்பு ஓலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

கடன்தாரர்கள் மேற்கண்ட தொகையினை செலுத்தத் தவறியதால் மேற்கண்ட சட்ட விதிகளின் பிரிவு 13(4) மற்றும் விதி 8ன் கீழ் **15.06.2024**ம் தேதி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக சுவாதீனம் செய்து உள்ளார் என்பதை கடன்தாரருக்கும், மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கிறார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தச் சொத்து குறித்து எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது. அவ்வாறு மேற்கொண்டால் **பேங்க் ஆப் இந்தியாவிற்கு ரூ.26,40,35,368.54 (ரூபாய் இருபத்து ஆறு கோடியே நாற்பது லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து முன்னூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா ஐம்பத்து நான்கு)** மற்றும் வட்டி சேர்த்து செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் என இதன் மூலம் அறிவிக்கிறார்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் விபரம்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் இணை 2 சார் பதிவு, நாமக்கல் நகர் மற்றும் கிராமத்தில், சேலம் ரோடு, பழைய க.ச.எண்.203 மற்றும் 204ல் தற்போதைய சர்வேபடி டவுன் சர்வே வார்டு B, பிளாக் எண்.1ல் டவுன் சர்வே எண்.6/6ல் திரு.பொன்னுசாமி பெயரில் நிலம் மற்றும் கட்டிடம் சேர்ந்துள்ள சார் பிணையச் சொத்து 0.8596.0 எக்டர் . ஏர்ஸ், தீர்வை ரூ.3.30. நிலத்தின் **எல்லைகள் : இனம் எண்.1 : 0.21 ¾ ஏக்கர் நிலத்தின் எல்லைகள் :** நாமக்கல்–சேலம் ரோட்டுக்குக் கிழக்கு, பொன்னுசாமி சொத்துக்கு மேற்கு, செங்கோட கவுண்டர் சொத்துக்கு வடக்கு, வாங்கிலி கவுண்டர் விற்பனை செய்த பிற நிலங்களுக்குத் தெற்கு. **இனம் எண்.2 : 0.71 ½ ஏக்கர் நிலத்தின் எல்லைகள் :** இனம் 1 சொத்து மற்றும் வாங்கிலி கவுண்டர் விற்பனை செய்த நிலங்களுக்குக் கிழக்கு, V.பொன்னுசாமி சொத்துக்கு மேற்கு, செங்கோட கவுண்டர் சொத்துக்கு வடக்கு, பொன்னுசாமி நிலங்களுக்குத் தெற்கு. ஆக உள்ள 0.93 ¼ ஏக்கர் நிலமும், அந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ளதும், கதவு எண்.742/142E, கொண்டதுமான கட்டிடமும், அவற்றின் மின்சார இணைப்புகள், குடிநீர் இணைப்புகள் முதலிய நிறுவப்பட்டவைகளும் சேர்ந்த சொத்து. மேற்படி சொத்து அனைத்துப் பயன்பாட்டுரிமைகள் மற்றும் பிற இணைப்புகளுடன் நாமக்கல் இணை 2 சார் பதிவு மாவட்ட அதிகார வரம்புக்குள் அமைந்துள்ளது.

அதிகாரம் பெற்ற அலுவலர்
பேங்க் ஆப் இந்தியா, கடன் வசூல் கிளை, கோயமுத்தூர்.

தேதி : 15.06.2024
இடம் : கோயமுத்தூர்

யூனியன் பேங்க் ஆப் இந்தியா Union Bank of India
இந்திய அரசு உபயோகப்படுத்து A Government of India Undertaking

Asset Recovery Branch : தபால் பெட்டி எண்.8, எண்.235, 1வது தளம், ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் – 641 001. மொபைல் : 8369578740

கேட்பு அறிவிப்பு

2002 சர்பாஸி சட்டம் பிரிவு 13(2)ன் கீழ்

பெறுநர் : **1. கடன்தாரர்கள் : 1 (A). M/s. எக்ஸெல் கலெக்ஷன், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.MA.அப்துல் நசீர்,** கதவு எண்.3, A.P.M. அபார்ட்மென்ட், அவ்வையார் வீதி, குரமங்கலம், சேலம்–636005. **திரு.MA.அப்துல் நசீர்,** கதவு எண்.3, A.P.M. அபார்ட்மென்ட், அவ்வையார் வீதி, சூரமங்கலம், சேலம்–636005. **1 (B). M/s. எக்ஸெல் கலெக்ஷன், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.MA.அப்துல் நசீர்,** எண்.181/3, மெய்யனூர் பை–பாஸ் ரோடு, மெய்யனூர், சேலம்–636004. **திரு.MA.அப்துல் நசீர்,** எண்.39–1, D 19, ஆசாத் நகர், சேலம் (C), சேலம்–636005. **2. உத்தரவாதமளித்தவர்கள் : திரு.S.முத்துக்குமார்,** த/பெ.திரு.சுந்தரம், எண்.12/5 சிவசங்கர் நகர், சேலம்–636008. **திரு.முத்துக்குமார்,** கதவு எண்.77/1 – D– 50, மரியனூர் மெயின் ரோடு, சேலம்–636002.

பொருள் : **2002ம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகள் சீரமைப்பு மற்றும் பிணையநலன் அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) உடன் பிரிவு 13(3)ன் படியான அறிவிப்பு**

கடன்தாரர்(கள்) **M/s. எக்ஸெல் கலெக்ஷன்** தாங்கள் கீழ்குறிப்பிட்ட கடன்வசதியை எமது **சேலம், ஐந்து ரோடுகள் கிளை(முன்னாள் கார்ப்பொரேஷன் வங்கி, சேலம் அழகாபுரம் கிளை)**யிலிருந்து பெற்று அந்த கணக்கின் நிலுவைகள்/தவணைகள்/வட்டி/இயக்குதலை நிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு, அதாவது வருமான அங்கீகாரம் மற்றும் விவேகமான கணக்கீட்டு விதிகளுக்கிணங்க இல்லாததால் அது **30.09.2017 அன்று** இயங்காச் சொத்து என வகைப்படுத்தப்பட்டது. **30.04.2024 அன்று** தங்கள் கணக்கிலுள்ள நிலுவைத் தொகை **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்)** ஆகும்.

மேற்குறிப்பிட்ட கணக்கில் கடன்தாரரிடமிருந்து வங்கிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை விபரங்கள் கீழ்வருமாறு :

1) ODA - கணக்கு எண். 565141000002794 – கடன் தொகை : ரூ.24,90,000/–, மொத்த நிலுவை 30.04.2024 தேதி அன்று : ரூ.51,97,093.69.

நாங்கள் பலமுறை நினைவூட்டியும் தாங்கள் மேற்படி கடன் கணக்கிற்கான நிலுவைத் தொகைக்கு, தொகை எதுவும் செலுத்தவில்லை.

செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிடி சட்டம் 2002–ன் பிரிவு 13(2)ன் விதிகளின்படி, தாங்கள் **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) 30.04.2024 தேதி அன்று** மற்றும் ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள், கடன் பத்திரங்களில் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி செலுத்தி தங்களது கடனை, கேட்பு அறிவிப்பு பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்தி தங்களது பிணையத்திலுள்ள சொத்தினை மீட்டுக் கொள்ள வேண்டும். தவறினால் மேற்கண்ட சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு அல்லது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி, வங்கியிடம் பிணையம் வைத்துள்ள சொத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை அறியவும்.

பிணையச் சொத்து விபரம் : விற்பனை ஆவண எண்.2594/16 நாள் 01.06.2016, விற்பனை ஆவண எண்.2723/16 நாள் 14.06.2016 மற்றும் MOD எண்.2768/16 நாள் 15.06.2016 ஆகியவற்றின்படி அடமானப்படுத்தப்பட்ட அசையாச் சொத்து. இனம் எண்.1 : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 2500 சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் :** அமானுல்லாஷா நிலத்துக்குக் கிழக்கு, 20 அடி ரோட்டுக்கு மேற்கு, ரோட்டுக்கு வடக்கு, 20 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. இதன் **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 40 அடி, மேல்புறம் தென்வடல் 40 அடி, வடபுறம் கிழமேல் 62 ½ அடி, தென்புறம் கிழமேல் 62 ½ அடி ஆக மொத்தம் 2500 சதுர அடி நிலம் தடவழி உரிமைகள் மற்றும் பிற பயன்பாட்டுரிமைகளுடன் D.மாறமங்கலம் கிராமத்தில் உள்ளது.

இனம் எண்.2(A) : பிளாக்–I : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 625 சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் :** 20 அடி லேஅவுட் ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்குக் கிழக்கு, அப்துல் நசீர் நிலத்துக்கு மேற்கு, 20 அடி அகல ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்கு வடக்கு, 30 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 10 அடி, மேல்புறம் தென்வடல் 10 அடி, வடபுறம் கிழமேல் 62 ½ அடி, தென்புறம் கிழமேல் 62 ½ அடி, ஆக உள்ள நிலம்.

இனம் எண்.2(B) : பிளாக்–II : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 504 ¾ சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் வருமாறு :** 20 அடி லேஅவுட் ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்குக் கிழக்கு, அப்துல் நசீர் நிலத்துக்கு மேற்கு, 20 அடி அகல ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்கு வடக்கு, 20 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 40 அடி, மேல்புறம் தென்வடல் குறுக்காக 33 அடி, வடபுறம் கிழமேல் 15 ½ அடி, தென்புறம் கிழமேல் 22 ½ அடி ஆக மொத்தம் சொத்தின் விஸ்தீரணம் [இனம் 2(A) மற்றும் 2(B)–625 சதுர அடி + 504 ¾ சதுர அடி] 1129 ¾ சதுர அடி உடன் தடவழி உரிமைகள் மற்றும் பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த சொத்து. D.மாறமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது.

எனவே நீங்கள் சர்பாஸிச் சட்டம் 2002ன் பிரிவு 13(2)ன் விதிகளுக்கிணங்க **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) 30.04.2024 தேதி அன்று** மற்றும் ஒப்புக் கொண்ட வீதாசாரப் படியான மேல் வட்டி செலவினங்களுடன் மற்றும் தாங்கள் செயல்படுத்திய கடன் ஆவணங்களின் குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க தங்களது கடன் நிலுவையை முழுவதுமாக இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 60 தினங்களுக்குள் செலுத்திவிடவும். தவறினால் வங்கி மேற்படி சட்டத்தின்படி எமக்களிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பிரிவு அல்லது அனைத்துப் பிரிவுகளின்படியான உரிமையினைப் பிரயோகித்து மேற்சொன்ன பிணையச் சொத்தின் மீதான அமலாக்க நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)ன்படி இந்த அறிவிப்பினை பெற்றதற்குப் பின்னர் தாங்கள் மேற்படி பிணையச் சொத்தின் மீது வங்கியின் ஒப்புதலின்றி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாதென எச்சரிக்க/தடுக்கப்படுகிறீர்கள்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இக்கணக்கிற்கு முன்னர் வழங்கப்பட்ட சர்பேசி அறிவிப்புகள் திரும்பப் பெறப்படுகிறது.

தேதி : 22.05.2024
இடம் : கோயமுத்தூர்

ஒம்./– அதிகாரம் பெற்ற அலுவலர்
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

பொது அறிவிப்பு

சேலம் மாநகரம், சேலம்-636016, அழகாபுரம், சாரதா கல்லூரி சாலை, பிளாக்-B, கந்தஸ்வாமி மெகா மால், தரைதளம், கதவு எண்.1/276/2ல் இயங்கி வரும் M/s. Aditya Birla Finance ltd., சேலம் கிளை அவர்களின் தகவல் பெற்று, சேலம் டவுன், நியூ பேர்லேண்ட்ஸ், A3 பாரதி தெரு, கதவு எண்.281/3/109ல் அலுவலகம் நடத்தி வரும் A.சசிகுமார் M.A., B.L., வழக்கறிஞர் ஆகிய நான் சகலமானவர்களுக்கும் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரர் வங்கியில் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் டவுன், வடுகர் தெரு, கதவு எண்.9-ல் வசித்து வரும் லேட். ராஜகோபாலன் அவர்களின் குமாரர் திரு.R.சிவகுமார் மற்றும் மேற்படியார் மனைவி திருமதி.R.P.நித்யா ஆகியோர் எனது கட்சிக்காரரான மேற்படி M/s Aditya Birla Finance ltd., நிறுவனத்தில் அடமானக்கடன் வேண்டி விண்ணப்பித்திருக்கிறார்கள் மேற்படி கடனுக்கு ஈடாக மேற்படி R.சிவகுமார் அவர்களும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட 13-06-2024ம் தேதிய பாகக்கரார் பத்திரம், மோகனூர் சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் 2024ம் ஆண்டின் 1499 எண்ணாக பதியப்பட்ட பத்திரப்படிக்கு "ஈ"-செடியூல் 1வது அயிட்டமாக கட்டப்பட்டுள்ள மோகனூர் கிராமம், வடுகர் தெரு, நத்தம் ச.நெ.143B/1ல், நத்தம் சர்வே எண்.143A/1A1A1, நத்தம்பட்டா எண்.1193, ச.நெ.537/15-ல் 832 சதுரடி நிலம் மற்றும் கட்டிட வகையாராக்களை அடமானம் செய்து கொடுக்கஉள்ளார்கள். மேற்படி சொத்தின் மூலஆவணம் மேற்படி R.சிவகுமார் அவர்களின் தந்தை லேட்.ராஜகோபாலன் அவர்களுக்கு கடந்த 26-03-1992-ம் தேதி மோகனூர் சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் 1992-ம் ஆண்டின் 279ஆக பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும், ஆனால் மேற்படி லேட்.ராஜகோபாலன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் அசல் கிரயப்பத்திரம் பதிவு எண்.279/1992-ஐ காணவில்லையென்றும், மேற்படி பத்திரத்தை எங்கு தேடியும் கிடைக்கவில்லையென்று கூறுகிறார்.

ஆகவே சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் மேற்படி அசல் ஆவணத்தை பொருத்து மேற்படி சொத்தின்பேரில் எவருகேனும் குதவை, தானம், குத்தகை, ஈடு, ஜப்தி, அல்லது எவ்விதமான வில்லங்கமோ, பாரதீனங்களோ ஏற்படுத்தியிருந்தால் அதனைப் பொருத்த தங்களது ஆட்சேபனைகளை இந்த அறிவிப்பு வெளியிட்ட 7 நாட்களுக்குள் எனக்கோ அல்லது எனது மேற்படி கட்சிக்காரர் நிறுவனத்திற்கோ தெரிவிக்கலாம் என்றும், அப்படி மேற்படி 7 நாட்களுக்குள் எவரிடமிருந்தும் ஆட்சேபனை கிடைக்கபெறவில்லையெனில், மேற்படி சொத்தின்பேரிலும், மேற்படி தொலைந்துபோன அசல் ஆவணத்தின் பேரிலும் எவ்விதமான வில்லங்கங்கள் இல்லையென்று எனது கட்சிக்காரர் வங்கி ஊர்ஜிதம் செய்து, மேற்படி திரு.R.சிவகுமார் மற்றும் திருமதி.R.P.நித்யா ஆகியோர்களுக்கு எனது கட்சிக்காரர் நிதிநிறுவனத்தால் அடமானக்கடன் வழங்கப்பட்டுவிடும் என்பதை இந்த பொதுஅறிவிப்பின் மூலம் சகலமானவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

சேலம்
20-06-2024

A.சசிகுமார், M.A., B.L. வழக்கறிஞர், En No. MS 458/1999
கதவு எண்.281/3/109, A3 பாரதி தெரு, நியூபேர்லேண்ட்ஸ்,
சேலம்-636016. Cell : 9080330015, 9443219828

DhanlaxmiBank established 1927

தனலக்ஷ்மி பேங்க் லிட்.